## அசல் வழக்கு எண்3/2023

**தேதி: 12.02.2026**

**வா.சா. 1: (திரு. விஜயா, க/பெ. முனியாண்டி )**

**வா.சா.1 09.09.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

நான் வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன், எனக்கு 6 ஏக்கர் நிலம் உள்ளது. என் கணவரும் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் கிடையாது என்றால் சரிதான், நிலத்தில் தான் வேலை செய்கிறேன். எங்கள் குடும்பமும் பிரதிவாதி குடும்பமும் உறவினர்களா என்றால் பங்காளி உறவு முறை. பிரதிவாதியின் கணவரின் பெயர் கெங்கன். கெங்கன் ஆரணியில் சுமை தூக்கும் தொழிலாளியாக உள்ளார் தான் என்றாலும், அவர் அந்த சங்கத்தில் உறுப்பினர் என்றாலும் சரிதான்.

கெங்கன் ஊரில் இருக்கும் போது எங்கள் உறவினர்களை எல்லாம் ஒன்று கூட்டி சீட்டி நடத்தி வந்தார் என்றால் சரிதான். நானோ என் கணவரோ கெங்கனிடம் சீட்டு எதுவும் கட்டவில்லை என்றால் சரிதான். கெங்கன் சீட்டு நடத்தும் போது கெங்கனிடம் நிறைய நபர்கள் சீட்டு கட்டாமல் ஏமாற்றியதால் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு சீட்டு கட்டி அவருக்கு பணம் எல்லாம் வராததால் கெங்கன் வீட்டிடம் சீட்டு கட்டிய நபர்கள் வந்து அவரின் வீட்டிடம் சண்டை போட்டார்கள் என்றால் நான் கழனிக் காட்டில் இருந்தேன், சண்டை போட்டார்கள் என்ற விவரத்தை மற்றவர்கள்

**சொல்லி கேள்விப்பட்டேன்.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.